# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 31 திங்கட்கிழமை 15.07.2024 கதிர் 301





# ஜனாதிபதித் தேர்தல் திகதி இம்மாதம் கடைசி வாரத்தில் வெளியாகலாம்!

## தேர்தல் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவிப்பு

ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் திகதி தொடர்பான அறிவிப்பு அநேகமாக ,ம்மாதம் கடைசி வாரத்தில் வெளியாகவுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் புதன்கிழமை [17] முதல் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் கிடைக்கப் பெறவுள்ளதுடன், அதன் பின்னர் தேர்தல் ஆணைக்குழு ஒன்று கூடி தேர்தலை நடத்தும் திகதியை தீர்மானிக்கும்.

ஜனாதிபதித் தேர்தலை தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்தவுடன், வேட்புமனு கோருவது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பை வெளியிடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2➤






## சாவகச்சேரி வைத்தியசாலைக்குள் மீண்டும் வந்த வைத்தியர் அர்ச்சுனா

### நீண்ட விவாதங்களின் பின்னர் வெளியேறினார்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் யார் என்பது தொடர்பில் வைத்தியர் ரஜீவுக்கும் வைத்தியர் அர்ச்சுனாவுக்கும் இடையில் ,ன்று நீண்ட விவாதங்கள் இடம்பெற்று பின்னர் வைத்தியசாலையில் ,ருந்து வைத்தியர் அர்ச்சுனா வெளியேறினார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகராக ,ருந்த வைத்தியர் ,ராமநாதன் அர்ச்சுனாவை மாற்றக் கோரி அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் கடந்த வாரம் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், பதில் வைத்திய 2➤

## மின் கட்டணத் திருத்தம் அதிகாரப்பூர்வ தகவல்!

இரண்டாவது மின் கட்டணத் திருத்தம் தொடர்பான விபரங்களை பொதுப் பயன்பாட்டு ஆணையம் இன்று அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

மின்சார சபையின் முன்மொழிவுகளை மீளாய்வு செய்து, உரிய தரவுகளை ஆராய்ந்து, பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொண்ட பின்னரே இந்தத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதன் தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அதன்படி, ,ந்த ஆண்டுக்கான ,ரண்டாவது மின் கட்டணத் திருத்தம் 22.5 வீதமாக ,ருக்கும் எனப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

2➤

## ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்குமாறு கோரிய அடிப்படை உரிமை மனு தள்ளுபடி!



அரசமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டம் உரிய வகையில் நிறைவேற்றப்படாததால் அதனைப் பொதுமக்கள் கருத்துக் கணிப்புக்கு உட்படுத்தி நிறைவேற்றும் வரை ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது அரசமைப்புக்கு முரணானது எனத் தீர்ப்பு வழங்குமாறு 2➤

## சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு எதிராக தகவல் அறியும் ஆணைக்குழு அழைப்பாணை




சந்தேகத்திற்கிடமான தரம் குறைந்த மருந்து வகைகளை கொள்வனவு செய்த சந்தர்ப்பத்தில் மருத்துவ விநியோக பிரிவில் நிலவிய மருந்துகளின் உண்மையான இருப்பு மற்றும் மருந்து தட்டுப்பாடு தொடர்பான உண்மைத்தகவல்களை வெளியிடாமை தொடர்பில் சுகாதார 2➤

## பணிப்புறக்கணிப்பு முடிவுக்கு வந்தது!

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் சங்கங்கள் முன்னெடுத்திருந்த பணிப்புறக்கணிப்பினை இன்று முதல் இடைநிறுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கும் அமைச்சருக்குமிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் 2➤


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## சாவகச்சேரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்தியட்சகருக்கு ஆதரவாக தென்மராட்சி பொது அமைப்புக்கள் மற்றும் பொதுமக்களின் ஏற்பாட்டில் மாபெரும் போராட்டம் நடத்தப்பட்ட நிலையில், பதில் வைத்திய அத்தியட்சகர் ,ராமநாதன் அர்ச்சுனா சுகவீன விடுமுறை எனத் தெரிவித்து கடந்த திங்கட்கிழமை கொழும்புக்குச் சென்றிருந்தார்.

இந் நிலையில், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் புதிய பதில் வைத்திய அத்தியட்சகராக வைத்தியர கோபாலமூர்த்தி ரஜீவ் கடந்த செவ்வாய்க்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

எனினும், அந்த நியமனம் தவறானது என்றும், தான் விடுமுறையில் ,ருப்பதாகவும், தானே தொடர்ந்தும் பதில் வைத்திய அத்தியட்சகர் என்றும் வைத்தியர் அர்ச்சுனா கடந்த ஒரு வாரமாகத் தெரிவித்து வந்தார்.

இன்றைய தினம்விடுமுறையை முடித்துக்கொண்டு கடமையைப் பொறுப்பெடுக்கப் போவதாகத் தெரிவித்த வைத்தியர் அர்ச்சுனா, காலை 9.30 மணியளவில் வைத்தியசாலைக்குள் உட்பிரவேசித்தார்.

வைத்தியசாலையைச் சுற்றி அவர் பார்வையிட்டதோடு வைத்திய அத்தியட்சகர் காரியாலயத்துக்குள் சென்று, வைத்தியர் ரஜீவை ஆசனத்திலிருந்து எழும்புமாறும், இது தன்னுடைய ஆசனம் என்றும் முரண்பட்டுக்கொண்டார்.

தனக்கு உத்தியோகபூர்வமாக மத்திய சுகாதார அமைச்சில் ,ருந்து தன்னை நீக்குவதற்கான கடிதம் வராத நிலையில் தானே சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் அத்தியட்சகர் எனத் தெரிவித்த வைத்தியர் அர்ச்சுனா, தனது விடுமுறை நேற்று நிறைவடைந்த நிலையில் ,ன்று மீண்டும் கடமைக்கு வந்துள்ளேன், என்று தெரிவித்தார்.

தற்போதய பதில் வைத்திய அத்தியட்சகர் ரஜீவ் தன்னுடைய நியமனக் கடிதங்களை வைத்தியர் அர்ச்சுனாவுக்குக் காட்டியபோதும் தானே வைத்திய அத்தியட்சகர் என முரண்பட்டுக்கொண்டு வைத்திய அத்தியட்சகர் ஆசனத்தில் வைத்தியர் அர்ச்சுனா அமர்ந்தார்.

இதன்போது தலையிட்ட சாவகச்சேரிப் பொலிஸார், வைத்தியர் அர்ச்சுனாவை அத்தியட்சகர் காரியாலயத்தில் இருந்து அழைத்துச் சென்று மற்றுமொரு மூடிய அறைக்குள் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

பொலிஸாருடனான நீண்ட கலந்துரையாடலின் பின்னர் நாளை சுகாதார அமைச்சர் உள்ளிட்ட உயர்மட்டக் குழு யாழ்ப்பாணத்துக்கு வரும்போது ,து தொடர்பில் முடிவு எட்டப்பட்டும் என்று வைத்தியர் அர்ச்சுனா தெரிவித்துவிட்டு வைத்தியசாலையில் ,ருந்து வெளியேறினார்.

வெளியேறிச் சென்ற வைத்தியர் அர்ச்சுனாவை வைத்தியசாலைக்கு வெளியில் குழுமிய பொதுமக்கள் அவரைத் தோளில் தாங்கிச் சென்றனர்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகராக வைத்தியர் ரஜீவ் தொடர்ந்தும் கடமையில் உள்ளார். வைத்தியசாலை பணிகள் சுமுகமாக இடம் பெற்று வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. (05)

## ஜனாதிபதித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதன் பின்னர், வாக்குப்பதிவு திகதி அறிவிக்கப்படும். ஜனாதிபதி தேர்தலுக்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டு மூன்று வாரங்களுக்குள் வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்வதுடன், வேட்பு மனுக்கள் பெறப்பட்ட நாளிலிருந்து 28 முதல் 42 நாட்களுக்குள் வாக்குப்பதிவு நடத்தப்படல் வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஜனாதிபதித் தேர்தலுக்காக வரவு செலவுத் திட்டத்தில் 10 பில்லியன் ஷரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள போதிலும், அதனை விட செலவு அதிகரிக்கும் என தேர்தல்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கடந்த தேர்தல்களை விட, ,ம்முறை அச்சிடுதல் பணிகள், போக்குவரத்து, தேர்தல் பணிகள் மற்றும் பாதுகாப்புக்கு அதிகளவில் பணம் ஒதுக்க வேண்டியிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி, ஆணைக்குழு அவ்வவ் அரசாங்க நிறுவனங்களுக்கு அவை தொடர்பான செலவின மதிப்பீடுகளை வழங்குமாறு அறிவித்துள்ளது. (ரெஜ-35)

## சுகாதாரத்துறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சின் உயர் அதிகாரிகளுக்கு எதிராக தகவல் அறியும் ஆணைக்குழு அழைப்பாணை அனுப்பியுள்ளது.

இது தொடர்பில் எழுத்துமூல விபரங்களை ஒரு வாரத்திற்குள் தாக்கல் செய்யுமாறு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதுடன், ,து தொடர்பான சட்ட நடவடிக்கைகளை எதிர்வரும் 24ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளதாகவும் ஆணைக்குழு சுகாதார அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

2023-2025 வரையான காலப்பகுதியில் ஏற்படக்கூடிய மருந்துப்பற்றாக்குறையை கட்டுப்படுத்துவது மற்றும் தரம் குறைந்த மருந்துகள் உட்பட அச்சந்தர்ப்பத்தில் மருத்துவ விநியோக பிரிவில் நிலவிய மருந்து தட்டுப்பாடு குறித்து சுகாதாரத்துறை எடுக்கவுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான வைத்தியர் சங்கக் கூட்டமைப்பினால் கேட்டுக் கொள்ளப்பட்ட விபரங்களை சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள் வழங்கத் தவறியமை தொடர்பாக தாக்கல் செய்த முறைப்பாட்டின் பிரகாரமே தகவல் அறியும் ஆணைக்குழு மேற்படி விசாரணைகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெஜ-36)

## மின் கட்டணத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்படி, 30-60 வீட்டு மின் அலகுக் கட்டணமானது, 20 ரூபாவில் இருந்து 9 ஷரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

30 அலகுகளைப்பயன்படுத்தும்நுகர்வோரின்மாதாந்த மின் கட்டணத்தின் பெறுமதி 390 ஷரூபாவிலிருந்து 280 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளதுடன், 60 அலகுகளைப் பயன்படுத்தும் வாடிக்கையாளரின் மாதாந்த மின் கட்டணம் 1,140 ரூபாவில் இருந்து 700 ரூபாவாகக் குறைந்துள்ளது.

மேலும், மத வழிபாட்டுத் தலங்களில் மின் கட்டணம் குறைக்கப்பட்டு ஒரு அலகிற்கான கட்டணம் 6 ரூபாவானது முதல் 90 அலகு வரை அறவிடப்படும் எனவும் தெரியவருகிறது.

## ஜனாதிபதித் தேர்தல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு உயர்நீதிமன்றத்தால் ,ன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. சட்டத்தரணி அருண லக்சிறி உனவட்டுன ,ந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார். ந்நிலையில்பிரதம நீதியரசர் தலைமையில் மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் குறித்த மனு இன்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே மனு விசாரணையின்றியே தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் வழக்கு கட்டணமாக 5 ,லட்சம் ஷரூபா செலுத்த வேண்டும். எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் இந்தக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும். மனுவின் பிரதிவாதிகளாகத் தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் அதன் உறுப்பினர்கள், நாடாளுமன்றச் செயலாளர் நாயகம், சட்டமா அதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டிருந்தனர்.

## பணிப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பின்னரே குறித்த முடிவு எட்டப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் 75 நாட்களாக பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

# வழமைபோல் சுமுகமாக இயங்குகிறது சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை

### புதிய பதில் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் ரஜீவ் தெரிவிப்பு

"சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பணிகள் வழமைபோல் சுமுகமாக நடைபெற்று வருகின்றன. எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லாமல் நோயாளிகள் தமக்கான சிகிச்சைகளைப் பெற்று வருகின்றார்கள்." - என்று சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் புதிய பதில் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் கோபாலமூர்த்தி ரஜீவ் தெரிவித்தார்.

வைத்தியசாலையின் இன்றைய நிலவரம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்ர்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வைத்தியர் அர்ச்சுனா இன்று காலை அலுவலகத்துக்கு வருகை தந்து தன்னுடைய காலப் பகுதியில் ஏற்கனவே இருந்த அரச கடிதங்களைப் பார்வையிட்டு கையொப்பத்தைப் பதிவிட்டிருந்தார்.

மத்திய அரசால் வழங்கப்பட்ட கடிதத்தின் உண்மைத்தன்மை தொடர்பில் தனக்குத் தெரியாது என்றும், தான் மத்திய அமைச்சிடம் நேரடியாகச் சென்று கேட்டபோது தனக்கு அந்தக் கடிதம் வழங்கப்படவில்லை என்றும் வைத்தியர் அர்ச்சுனா தெரிவித்தார். நான் அந்தக் கடிதத்தின் பிரதியை அவருக்கு வழங்கினேன். அவர் அதனைப் பார்வையிட்டபோதும் எடுத்துச் செல்லவில்லை. அதன் பின் தொடர்ச்சியாக என்னைக் கடமையாற்றுமாறு கூறிவிட்டு வைத்தியர் அத்தியட்சகர் காரியாலயத்திலிருந்து வைத்தியர் அர்ச்சுனா வெளியேறினார். வைத்தியசாலைப் பணிகள் வழமைபோல் சுமுகமாக நடைபெற்று வருகின்றன. எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லாமல் நோயாளிகள் தமக்கான சிகிச்சைகளைப் பெற்று வருகின்றார்கள். அதேபோல் வைத்தியர்களும், ஏனைய உத்தியோகத்தர்களும் தமது கடமையில் ஈடுபட்டு வருகின்றார்கள். நாங்கள் தொடர்ச்சியாக வைத தியசாலையினுடைய அபிவிருத்திப் பணிகள் தொடர்பாகவும் கலந்துரையாடி வருகின்றோம்" - என்றார்






செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# புதிய தொழிநுட்பங்களுடன் பயிரிட்ட நெற்செய்கையின் அறுவடை விழா





(வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை விவசாய விரிவாக்கல் நிலையத்திற்குட்பட்ட மாவடி முன்மாரிக் கிராமத்தில் புதிய தொழிநுட்பங்களுடன் செய்கை பண்ணப்பட்ட நெற்செய்கையின் அறுவடை விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மாவடி முன்மாரி விவசாய போதனாசிரியர் பிரிவிற்கு பொறுப்பான தொழிநுட்ப உத்தியோகத்தர் துஷாந் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், தெற்கு வலய உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி நித்தியா நவஷரூபன், பாடவிதான உத்தியோகத்தர்களான லாவண்யா செந்தீபன், லக்ஷ்மன், இளமாறன், தெற்கு வலய விவசாயப் போதனாசிரியர்கள், தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது பரசூட் முறை, இயந்திர நாற்று நடுகை மற்றும் வீசி விதைத்தல் ஆகிய மூன்று முறைகளிலும் செய்கை பண்ணப்பட்ட நெற்செய்கை அறுவடையின் பின் பயிர்வெட்டு அளவீடு செய்யப்பட்டது. வீசிவிதைத்தலை விடவும் ஏனைய இரு முறைகளிலும் அதிக விளைச்சல் கிடைத்ததோடு உற்பத்தி செலவும் குறைவாக இருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் எம்.பரமேஸ்வரனின் வழிகாட்டலில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல இடங்களிலும் இவ்வாறான முன்மாதிரி துண்டச்செய்கைகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ்ச்சங்கத்தின் ஆடிப்பிறப்பு விழாவும் சோமசுந்தரப் புலவர் நினைவரங்கமும்

*யாழ்ப்பாணத்தமிழ்ச்சங்கம்நடத்தும்ஆடிப்பிறப்பு விழாவும் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் நினைவரங்கமும் 17 ஆம் திகதி புதன்கிழமை காலை 11 மணிக்கு நவாலி மகாவித்தியாலயத்தில் தமிழ்ச்சங்கத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.*

*இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் கி.கிருஷ்ணானந்தா வாழ்த்துரையையும்ஜீவா.சஜீவன் தொடக்கவுரையையும் வழங்குவர்.*


*யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்துறைப் பேராசிரியர் செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம் ஆடிப்பிறப்பும் நவாலியூர் சோமசுந்தரப்புலவரும் என்ற பொருளில் சிறப்புரை ஆற்றுவார். பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.*






## பளவெளி ஆதி சிவன் ஆலய எண்ணெய்க் காப்பு நிகழ்வு





அம்பாறை, வளத்தாப்பிட்டி கிராமத்தில் எழுந்தருளி அருளாட்சி புரியும் ஆதிசக்தி உடனுறை ஆதி சிவன் ஆலயத்தின் குடமுழுக்கு விழாவின் ஓரங்கமான எண்ணெய்க்காப்புச் சாத்தும் வைபவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

(படங்கள் - காரைதீவு சகா )

# கதிர்காமம் வருகின்ற பக்தர்களின் மோட்டார் சைக்கிள்களில் எரிபொருள் திருடப்படுகின்றது



கதிர்காமம் உற்சவத்திற்காக வருகை தருகின்ற பக்தர்களின் மோட்டார் சைக்கிள்களின் குழாய்களை அறுத்து எரிபொருளை திருடும் கும்பலால் பக்தர்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு ஆலய சுற்று வட்டாரத்தில் பல்வேறு இடங்களில் நிறுத்தப்பட்டிருந்த, சுமார் 13 மோட்டார் சைக்கிள்களிலிருந்து எரிபொருள் குழாய்கள் வெட்டப்பட்டதில், அவற்றின் உரிமையாளர்கள் எரிபொருள் இல்லாமல் தங்கள் மோட்டார் சைக்கிள்களை தள்ளிக்கொண்டு எரிபொருள் நிலையத்தை நோக்கி செல்ல வேண்டியேற்பட்டதாக கூறப்படுகின்றது.

இது மட்டுமன்றி, முச்சக்கர வண்டிகளிலிருந்து பற்றரி மற்றும் உதிரிப்பாகங்களை கழற்றிச் செல்லும் சம்பவங்களும் பல பதிவாகியுள்ளன. எதிர்வரும் நாட்களிலும் இன்னும் ஏராளமான பக்தர்கள் இங்கு வருகை தரவுள்ளமையினால், இது தொடர்பில் பொலிஸார் விசேட வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென மக்கள் தெரிவித்துள்ளனர். (ரெஜ-32)

## 'டின் மீன்' இறக்குமதி நிறுத்தப்படாவிட்டால் விரைவில் மீனவர்கள் போராட்டம் நடத்தும் சூழ்நிலை ஏற்படலாம்

### டின் மீன் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் எச்சரிக்கை



டின் மீன் இறக்குமதியை நிறுத்தாவிட்டால், விரைவில் நாட்டில் மீனவர்கள் போராட்டம் நடத்தும் சூழ்நிலை ஏற்படலாம் என டின் மீன் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் ஷிரான் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். தற்போது டின் மீன் இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகின்ற போதிலும் 45 இலட்சம் டின் மீன்கள் சுங்கத்தினூடாக நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

டின் மீன் உற்பத்திக்கு 'லின்னா' வகை மீன் பயன்படுத்தப்படுவதாகவும், ஒகஸ்ட் மாதத்தில் லின்னா மீன்களின் அறுவடை அதிகமாக அமையவுள்ள போதிலும், டின் மீன் உற்பத்தி நிறுவனங்களால் இந்த லின்னா மீன்களை வாங்கக்கூடிய நிலை இல்லாமையால், இதனால் மீனவர்கள் பாதிப்படைவதன் காரணமாகவே மீனவர்களின் போராட்டம் ஏற்படக்கூடிய சாத்தியம் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூர் டின் மீன்களுக்கு 'வற்' வரி விதிக்கப்படுகின்ற அதேவேளை, இறக்குமதி செய்யப்படும் டின் மீன்களுக்கு சிறிய அளவிலேயே வரி விதிக்கப்படுவதாக தெரிவித்த அவர், இவ்வாறான நிலையில் இலங்கையின் டின் மீன் உற்பத்தியாளர்கள் இறக்குமதி செய்யப்பட்ட டின் மீன்களின் விலையுடன் போட்டியிட முடியாத காரணத்தினால் நாட்டில் டின் மீன் தொழிற்சாலைகள் மூடப்படக்கூடிய அபாயம் உள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே இவ்வாறு பல தொழிற்சாலைகள் மூடப்பட்டுவிட்டதாகவும், இயங்கி வருகின்ற மிகுதி தொழிற்சாலைகளும் ஊழியர்களின் எண்ணிக்கையை குறைத்தவாறு மிகுந்த சிரமத்துடன் அவற்றை நடத்தி வருவதாகவும் தெரிவித்த அவர், கொரோனா தொற்று உள்ளிட்ட இதர அனர்த்த காலங்களிலும், நாட்டில் டொலர் கிடைக்காத காலங்களிலும் உள்ளூர் டின் மீன் உற்பத்தியாளர்கள் நாட்டுக்கு தேவையான டின் மீன்களை விநியோகித்ததாகவும், இவ்வாறான சேவையைச் செய்த டின் மீன் தொழிற்சாலைகளை அரசாங்கம் இவ்வாறு நடத்துவது வருந்தத்தக்கது என்றார்.

இந்த ஆண்டு தொடக்கத்திலிருந்து டின் மீன் இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ள போதிலும், இந்த ஆண்டில் கடந்த சில மாதங்களில் மாத்திரம் 45 இலட்சம் டின் மீன்கள் சுங்கம் ஊடாக இறக்குமதியாகியுள்ளதாகவும் டின் மீன் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் ஷிரான் பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளார். (ரெஜ-34)




## நாட்டின் சிறைச்சாலையில் கைதிகளின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்துள்ளதாக சிறைச்சாலை திணைக்கள அறிக்கை தெரிவிப்பு

### 74 வீதமானவர்கள் சந்தேக நபர்களே எனவும் கூறப்படுகின்றது

2023 ஆம் ஆண்டிற்கான சிறைச்சாலை திணைக்களத்தால் வெளியிடப்பட்ட வருடாந்த செயலாற்றுகை அறிக்கையின்படி, கடந்த ஆண்டில் (2023) ஒரு இலட்சத்து எண்பத்து ஐந்தாயிரத்து ஐம்பத்தாறு கைதிகள் மற்றும் சந்தேக நபர்கள் (185,056 பேர்) சிறைசாலையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 46,939 கைதிகள் மற்றும் 138,117 பேர் சந்தேக நபர்களாக உள்ளனர். சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களில் 74 வீதமானவர்கள் சந்தேக நபர்கள் என்ற பட்டியலில் இடம்பெற்றுள்ளவர்களாவர் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தீர்க்கப்படாத வழக்குகளின் எண்ணிக்கை அதிகரிப்பதாலும், தொடர் காலதாமதத்தாலும், சில வழக்குகளில் அரசின் பகுப்பாய்வு அறிக்கை தாமதம், பிணை பணம் வழங்க முடியாத நிலை , பிணை வழங்கல் சட்டத்தை முறையாக செயல்படுத்த தவறியமை ஆகிய காரணங்களினால் சிறையிலுள்ள சந்தேக நபர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலையில் அடைக்கப்படக்கூடிய மொத்த கைதிகளின் எண்ணிக்கை 10,395 ஆகும். எனினும், அதிக எண்ணிக்கையிலான சந்தேக நபர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதால், நாட்டின் சிறைச்சாலையில் 14 சதவீதம் அளவுக்கு அதிகமான நெரிசல் இருப்பதாகவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ரெஜ-33)

# பாடசாலை ரக்பி வீரர்களுக்கு காப்புறுதித் திட்டம் அறிமுகம்



ரக்பி விளையாட்டில் ஈடுபடும் அனைத்துப் பாடசாலை மாணவர்களுக்கும் காப்புறுதித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு இசிப்பதன கல்லூரிக்கும், கண்டி திரித்துவ கல்லூரிக்கும் இடையில் நேற்று முன்தினம் (13) நடைபெற்ற ரக்பி லீக் போட்டிக்கு முன்னதாக நடைபெற்ற நிகழ்வில், விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ இரு பாடசாலைகளின் ரக்பி வீரர்களுக்கும் காப்புறுதிகளை வழங்கி வைத்தார். இந்தக் காப்புறுதித் திட்டத்தினூடாக இலங்கையில் உள்ள அனைத்து ரக்பி விளையாடும் பாடசாலைகளிலும் உள்ள 19 மற்றும் 16 வயதுக்குட்பட்ட ரக்பி வீரர்கள் பயன்பெறுவர், என அவர் தெரிவித்தார். இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. (04)

# ஜனாதிபதி புலமைப்பரிசில் வழங்கல் கிளிநொச்சி மாவட்ட பிரதான நிகழ்வு



பாடசாலை மாணவர்களுக்கான ஜனாதிபதி புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தின் கிளிநொச்சி மாவட்டத்திற்கான பிரதான நிகழ்வு நேற்று கிளிநொச்சி தனியார் விருந்தகம் ஒன்றில் நடைபெற்றது.

கிளிநொச்சி வடக்கு வலயத்திற்கு காலை 9 மணிக்கும் கிளிநொச்சி தெற்கு வலயத்திற்கு காலை 11 மணிக்கும் இருவேறு நிகழ்வுகளாக இது இடம்பெற்றது.

காலை ஆரம்பமான வடக்கு கல்வி வலயத்திற்கான நிகழ்வில் விருந்தினர்களாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் பீ.எஸ்.எம் சாள்ஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

குறித்த நிகழ்வில் ஜனாதிபதியின் வடக்குக்கான சிரேஷ்ட மேலதிக செயலாளர் சமன் பந்துலசேன, வடமாகாண ஆளுநரின் செயலாளர், வலயக் கல்விப்பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இரண்டு வலயங்களைச்சேர்ந்த 662 மாணவர்களுக்கு இதன்போது புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

## அட்டாளைச்சேனையில் தமிழ் லெட்டர் அமைப்பினால் 40 பேருக்கு கௌரவம்



(எம் எப்.நவாஸ்)

தமிழ் லெட்டர் அமைப்பினால் துறைசார்ந்த 40 பேருக்கு விருது வழங்கும் நிகழ்வு அதன் தலைவர் ஏ.எல்.ரமிஸ் தலைமையில் அட்டாளைச்சேனை லெயிட்ஸ் ஹோட்டலில் கடந்த சனியன்று (13) நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் எம்.பி கலந்து சிறப்பித்தார். அத்தோடு அதிதியாக கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எம்.கோபாலரத்னம் மற்றும் துறை சார்ந்தவர்களும் கலந்து கொண்டனர்.

மேலும் இந்நிகழ்வின் பிரதம அதிதிக்கும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன் வைத்தியத்துறை, கல்வி, ஏனைய சமூக சேவைகள் போன்ற துறைகளில் சேவையாற்றியவர்களுக்கும் கௌரவம் வழங்கப்பட்டது.

சமூகசேவை மற்றும் இனங்களிடையே இனநல்லுறவுகளை தொடர்ந்தும் பேணிவரும் அம்பாறை மாவட்ட று/ஹுணு லங்கா அமைப்பிற்கு சிறந்த சமூக சேவை அமைப்புக்கான விருதும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## தென்னாடு சிவமடத்தின் ஏற்பாட்டில் சைவ அறங்காவல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்தென்னாடு –செந்தமிழ் ஆகம சிவ மடத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சைவ அறங்காவல் என்ற பொருளில் அமைந்த முழு நாள் கருத்தரங்கு சனிக்கிழமை (13) காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல நட்சத்திர விடுதியில் நடைபெற்றது.

தென்னாடு அமைப்பின் நிறுவுனர் பொறியாளர் குணரத்தினம் பார்த்திபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்விற்கு தென்னாடு பத்திரிகை ஆசிரியர் செந்தமிழாதன் (ஜீவா. சஜீவன்) தலைமை தாங்கினார்.

தருமபுரம் ஆதீனத்தின் திருக்கேதீச்சரக் கிளைமட கட்டளை தம்பிரான் ஸ்ரீமத் மீனாட்சி சுந்தர தம்பிரான் சுவாமிகள், யாழ்ப்பாண பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி சிறீசற்குணராஜா, சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் ஆகியோர் நிகழ்வில் முன்னிலை வகித்தனர்.

நிகழ்வில் கருத்துரைகளை இலங்கையில் சைவம் அன்றும் இன்றும் என்ற பொருளில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசனும் சைவத்தின் சமகால செல்நெறி – சில அவதானிப்புகள் என்ற பொருளில் கொழும்பு ஆறுமுகநாவலர் சபை செயலாளர் மருத்துவர் கி.பிரதாபனும் திருமுறைச் சிறப்பும் சாத்திரச் சிறப்பும் என்ற பொருளில் தமிழ்நாடு செந்தமிழரசு கி.சிவகுமாரும் சைவ அறங்காவல் என்ற பொருளில் பொறியியலாளர் குணரத்தினம் பார்த்தீபனும் திருமுறை மகத்துவம் என்ற பொருளில் சைவநீதி அமைப்பின் தலைவர் குணா. துரைசிங்கமும் கருத்துரைகளை வழங்கினர்

வடக்கு, கிழக்கு, மலையகம், கொழும்பு என இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட இளையோர் இக்கருத்தரங்கில் பங்கு பற்றி பயன்பெற்றனர். நிகழ்வில் பங்குபெற்றோருக்கு தென்னாடு பத்திரிகை, விபூதிப் பொட்டலங்கள் மற்றும் நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.



# வரலாற்றில் பிரசித்தி பெற்ற வணிக பொருளாதார மையமான அநுராதபுர நகரை மீண்டும் புகழ்பெறச் செய்ய வேலைத்திட்டம்!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு

வரலாற்றில் பிரசித்தி பெற்ற வணிக மற்றும் பொருளாதார மையமாக இருந்த அநுராதபுர நகரத்தை மீண்டும் உலகப் பிரசித்தமான நகரமாக மாறுவதற்குத் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படுமென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

அனுராதபுரத்தில் 50 கிலோவோட் மின்சார உற்பத்திக்கான சூரிய சக்தி மற்றும் கணினிக் கட்டமைப்பை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வரலாற்று நாகரிக அம்சங்களைக் கொண்டு, அநுராதபுரத்தை மீண்டும் உலகப் பிரசித்தமான நகரமாக மாற்றுவதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும் என்றும், ஜய ஶ்ரீ மகா போதிய மற்றும் அட்டமஸ்தான வளாகங்களுக்கு சூரிய சக்தி மூலம் மின்சாரம் வழங்க



அரசாங்கம் ஒத்துழைக்கும் என்றும் இதன்போது ஜனாதிபதி தெரிவித்தார். தஞ்சாவூர், மதுரை மற்றும் காஞ்சிபுரம் நகரங்களைப் பற்றி இன்று உலகம் முழுவதும் பேசப்படுகிறது. ஆனால், அதன் நான்காவது நகரமாகக் கருதப்பட வேண்டிய அநுராதபுரத்தின் முன்னேறத்துக்கான ஏற்பாடுகள் இதுவரையில் செய்யப்படவில்லை என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அநுராதபுரக் கலாசாரம், கல்வி, வர்த்தகம் மற்றும் பொருளாதாரப் பெறுமதிகளை உலகுக்கு தெரியப்படுத்தி, அதன் புராதன அறிவியல் ஆராய்ச்சி நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை செய்வது குறித்து அடுத்த வாரம் இலங்கைக்கு வரவிருக்கும் யுனெஸ்கோ அமைப்பின் பணிப்பாளருடன் கலந்துரையாட எதிர்பார்ப்பதாகவும், அந்தப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க உலகின் பல்வேறு பல்கலைக்கழகங்கள் முன்வந்திருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அனுராதபுரம் புனித நகருக்கு வருகை தந்த மக்களின் பிரச்சினைகளையும் ஜனாதிபதி கேட்டறிந்து கொண்டார். (04)

# நிந்தவூர் அட்டப்பள்ளம் பிரதேசத்தில் மண்ணரிப்பு கடல் அலை காவு வாங்குவதாக மக்கள் கவலை!

(எம்.ஏ.ஏ.அக்தார்)

அண்மைக்காலமாக அம்பாறை மாவட்டத்தின் கிழக்குக் கடல் பரப்பில் அடிக்கடி ஏற்படும் கடல் கொந்தளிப்பால் ஏற்படும் பாரிய அலைகள் கரையை நோக்கி வருவதனால் தினசரி நிந்தவூர், அட்டப்பள்ளம் கடற்கரைப் பிரதேசம் காவு கொள்ளப்படுகிறது. இதனால், மீனவர்களும் சுற்றயல் பிரதேச குடியிருப்பாளர்களும் சொல்லொணாத் துயரங்களுக்கு உள்ளாகி வருவதாக முறையிடுகின்றனர்.

கடற்கரைப் பிரசேத்திலுள்ள பயன்தரும் தென்னை மரங்கள் கடலரிப்பினால் தரையில் வீழ்ந்து காணப்படுவதுடன் அவற்றின் வேர்களும் தரைக்கு மேலாக வெளிவந்தும் உள்ளன. இதனால் தென்னந்தோட்டங்களைப் பராமரித்து வருவோர் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்கி வருவதுடன் மீனவர்கள் தாம் ஓய்வு எடுப்பதற்கும், தமது தோணி, படகு, மீன்பிடி வலை என்பவற்றை திருத்துவதற்காகப் பயன்படுத்தும் இயற்கையான நிழலும் இல்லாமல் போயுள்ளதாக அவர்கள் கவலை தெரிவித்தனர்.

நிந்தவூர், அட்டப்பள்ளம் கடற்கரைப் பிரதேச மீனவர்கள் தமது தோணி மற்றும் படகுகளை நிறுத்தி வைப்பதற்கு தற்போது போதிய இடவசதியும் தமது மீன்பிடி உபகரணங்களை பாதுகாத்து வைப்பதற்கான மீன்வாடிகளும் இல்லாமலிருப்பது தமக்குப் பெரும் கவலையளிப்பதாகவும், இந்த நிலைமை ஏற்படுவதற்கு ஒலுவிலில் அமைக்கப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகமும் ஒரு காரணமாகும் எனவும் பிரதேச மீனவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இவ்வாறாக தொடர்ச்சியாக கடலலையினால் நிந்தவூர் மற்றும் அட்டப்பள்ளம் கடற்கரைப் பிரதேசம் காவு கொள்ளப்பட்டுப் போகுமேயானால், எதிர்காலத்தல் இப்பிரதேசத்தில் கடற்கரையொன்று முழுமையாக



இல்லாமல் போனாலும் போகலாம் என்ற அச்சம் இப்பிரதேச மக்களிடையே அதிகரித்துள்ளது.








## வீதியை அபிவிருத்தி செய்து தருமாறு கோரி போராட்டம்!

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வளத்தாப்பிட்டி இஸ்மாயில் புரம் பிரதான வீதியை அபிவிருத்தி செய்து தருமாறு கோரி இன்று பொது மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வளத்தாப்பிட்டி இஸ்மாயில்புரம் பொதுமக்களினால் இப்போராட்டமானது இன்று காலையில் நடாத்தப்பட்டது.

இதன் போது கர்ப்பிணிப் பெண்கள், நோயாளிகள், பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், பள்ளிவாசலுக்கு தொழுகைக்காக செல்வோர், கூலித்தொழிலாளிகள் போன்றவர்கள் செல்வதற்கு ஒழுங்கான பாதை இல்லை எனவும், மக்களின் வாழ்வாதாரம், விளையாட்டு மைதானம், வாசிகசாலை, வைத்தியசாலை போன்றவற்றை அமைத்துத் தருமாறும், சுனாமி வீட்டு திட்டத்தின் உறுதியையும் மற்றும் காணிகளின் உறுதிகளையும் பெற்று தர வேண்டும் எனவும் போராட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.

குறிப்பாக சுமார் ஒன்றரைக் கிலோமீற்றர் நீளமான இந்த வீதியானது பள்ளிவாசல், முஸ்லிம் மையவாடி, பாடசாலை, சந்தை தொகுதி என்பனவற்றுக்கான பொதுமக்களின் அன்றாடப் போக்குவரத்துக்கு இன்றியமையாததாக உள்ளது எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

பொது மக்கள் சிலர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது, 2008 ஆண்டிற்குப் பிறகு இருந்து இது வரை எந்த அபிவிருத்தியும் இங்கு இடம் பெறவில்லை எனக் கவலை வெளியிட்டனர்.

அரசியல்வாதிகள் பல வீதிகளை அபிவிருத்தி செய்கின்றனர். ஆனால், ஏன் இந்த வீதியை அபிவிருத்தி செய்ய முடியாமல் உள்ளது?, என்றும் அவர்கள் கேள்வி எழுப்பினர்.

காட்டு யானைகள் வந்து எங்களது வீடு மற்றும் பயிர் செய் நிலங்களை அளிக்கின்றன. அதுமட்டுமின்றி வைத்தியசாலைக்குச் செல்வதாக இருந்தால் சம்மாந்துறைக்கு அல்லது அம்பாறைக்குச் செல்ல வேண்டும். இது பகல் நேரத்தில் என்றால் பேருந்துகளில் செல்லலாம்.

இரவு வேளையில் செல்லுவதற்கு முச்சக்கரவண்டிகளுக்குத் தொலைபேசி எடுத்தால் சிலர் “பாதை சரியில்லை. இதனால் நாங்கள் வர முடியாது” என்று கூறுகின்றனர்.

மருத்துவத் தேவைகளுக்கு உரிய நேரத்திற்கு வராது தாமதமாக வருவதனால் உயிர் இழப்புக்களும் ஏற்படுகின்றன.

பேருந்துகளில் மாணவர்கள் பிரத்தியேக வகுப்புகளுக்கு செல்லுவதற்கு சென்றால் பேருந்துகளை சாரதிகள் நிறுத்தாமல் செல்லுகின்றனர். இதனால் மாணவர்களின் வகுப்புகள் தடைப்படுகின்றன.

இவ்வாறான பல பிரச்சனைகளை அன்றாடம் எதிர்கொள்கின்றோம். வீதியைப்புனரமைப்பதோடு, எங்களுக்கு பேருந்துத் தரிப்பிடம் ஒன்றை அமைத்து தருமாறும் கோரிக்கை விடுக்கின்றோம், எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் குறிப்பிட்டனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.07.2024இல் வெளியிடப்பெற்றது.